22.10.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேதாரண்யம் கிராமப்புறங்களில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

வேதாரண்யம் கிராமப்புற பகுதிகளில் வியாழக்கிழமை திடீர் மழைப் பொழிவு ஏற்பட்டதையடுத்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வேதாரண்யம் பகுதியில் கடந்த பல நாள்களாக மழை இல்லாமல் வறண்ட வானிலையே நிலவி வருகிறது. காவிரி நீர் பிரச்னை ஏற்பட்ட நிலையில், மழையும் இல்லாத காரணத்தால் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ள சம்பா நெல் சாகுபடி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இந்த நிலையில், வியாழக்கிழமை காலை கோடியக்கரை பகுதியில் மழைப் பொழிவு ஏற்பட்டது. பகலில் வேதாரண்யம் பகுதியின் தெற்குப் பகுதியில் உள்ள தகட்டூர், மருதூர், ஆயக்காரன்புலம் கிராமங்களின் சுற்றுப் பகுதியில் சுமார் 40 நிமிடங்கள் மழைப் பொழிவு இருந்தது.

நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ள நெல் வயல்களுக்கு இந்த மழை ஏற்றவையாக அமைந்துள்ளது. ஆனாலும், வியாழக்கிழமை பகலில் ஏற்பட்ட இந்த மழை வேதாரண்யத்தின் வடக்குப் பகுதி, நகரப் பகுதியில் இல்லை.

பல நாள்களுக்குப் பிறகு பெய்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு, தொடர்ந்து மழைப் பொழிவு ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

**பண்ணைக் கருவிகள் பராமரிப்புப் பயிற்சி**

சிக்கல், வேளாண் அறிவியல் நிலையம், கோவை மத்திய வேளாண் பொறியியல் நிறுவன மண்டலம் சார்பில் பண்ணைக் கருவிகள் இயக்குதலும், பராமரித்தலும் குறித்த பயிற்சி முகாம் சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

மத்திய வேளாண் பொறியியல் நிறுவன முதுநிலை விஞ்ஞானி த. செந்தில்குமார், வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் பா. காமராஜ், மத்திய வேளாண் பொறியியல் தொழில்நுட்ப பிரிவு முதன்மை விஞ்ஞானி ரவீந்திரநாயக் ஆகியோர் பண்ணைக் கருவிகளின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்த தொழில்நுட்பங்களை விளக்கி, செயல் விளக்கம் அளித்தனர்.

சிக்கல், வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் அ. அனுராதா, வேளாண் அறிவியல் நிலைய விரிவாக்கத் துறை உதவி பேராசிரியர் செ. திலகம், வேளாண் அறிவியல் நிலைய வானவியல் துறை உதவி பேராசிரியர் ரா. ரவி, தொழில்நுட்ப திட்ட உதவியாளர் வீ. ஞானபாரதி ஆகியோர் பேசினர். திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவர்கள், நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு ரூ.1,345 கோடி பயிர்க் கடன்



தமிழகத்தில் 2 லட்சத்து 5 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.1,345 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கூட்டுறவுத் துறை அதிகாரிகளுடன் அந்தத் துறையின் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ வியாழக்கிழமை ஆலோசனை நடத்தினார். அப்போது, அவர் பேசியது:-

தமிழகத்தில் விவசாயிகள் கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ், ரூ.5,780.92 கோடி அளவிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதற்கான சான்றிதழ்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

நிகழாண்டில், இதுவரையில் 2 லட்சத்து 5 ஆயிரத்து 706 விவசாயிகளுக்கு ரூ.1,345.33 கோடி அளவுக்கு பயிர்க் கடன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ரூ.56.12 கோடி அளவுக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், அம்மா-கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.403.73 கோடி மதிப்பில் மருந்துகள் விற்கப்பட்டுள்ளன என்றார்.

## புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு



விவசாயிகள் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைய வேண்டுமென கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நடப்பு 2016-17ஆம் ஆண்டில் பிரதமரின் புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து முக்கியமான உணவுப் பயிர்கள், வணிகப் பயிர்கள், தோட்டப் பயிர்களை காப்பீடு செய்யலாம். இந்த புதியத் திட்டத்தில் விதைக்க, நடவு செய்ய இயலாத சூழ்நிலை, முளைத்து கருகியது, நடவு பொய்த்தல், பயிர் பருவ இடைக்கால இழப்பீடு, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் ஆகிய நிகழ்வுகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது.

காப்பீட்டுத் தொகையானது அதிகபட்சமாக ஏக்கருக்கு நெல்லுக்கு ரூ.24,600, கரும்புக்கு ரூ.45 ஆயிரம், உளுந்துக்கு ரூ.12 ஆயிரம், நிலக்கடலைக்கு ரூ.2 ஆயிரம், கம்புக்கு ரூ.5 ஆயிரம், எள்ளுக்கு ரூ.6,300 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பட்டத்தில் நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் ஏக்கருக்கு

ரூ.369 வீதம் தங்கள் பகுதியில் உள்ள கிராம கூட்டுறவு வங்கி மற்றும் இதர வங்கிகளில் பயிர் செய்ததற்கான ஆவணங்களுடன் நவ.30ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். அனைத்து பயிர்களுக்கும் இதுபோன்று நிர்ணயிக்கப்பட்ட பிரீமிய தொகை உரிய காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும்.

பயிர்க் கடன் பெறாத விவசாயிகளும் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகலாம். எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழையை கருத்தில் கொண்டு விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டுமென அதில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 'விளை நிலங்கள் வளமாக இருக்க மண்புழுக்கள் அவசியம்'



விளை நிலங்கள் வளமாக இருக்கவும், அதிக விளைச்சல் கிடைக்கவும் மண் புழுக்கள் அவசியம் என்று சிட்டிசன் கன்ஸ்யூமர் சிவிக் ஆக்சன் குரூப் அமைப்பின் இயக்குநர் சரோஜா பேசினார்.

சென்னை சிட்டிசன் கன்ஸ்யூமர் சிவிக் ஆக்சன் குரூப், திருவண்ணாமலை சினம் தொண்டு நிறுவனம் இணைந்து விவசாயிகளுக்கான ஒரு நாள் சிறப்புக் கருத்தரங்கை வியாழக்கிழமை நடத்தியன. சினம் தொண்டு நிறுவன வளாகத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்கு தொண்டு நிறுவன இயக்குநர் இராம.பெருமாள் தலைமை வகித்தார். சிட்டிசன் கன்ஸ்யூமர் சிவிக் ஆக்சன் குரூப் நிறுவனப் பணியாளர் அமுதா முன்னிலை வகித்தார். சினம் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் எல்.திலகவதி வரவேற்றார்.

சிட்டிசன் கன்ஸ்யூமர் சிவிக் ஆக்சன் குரூப் இயக்குநர் சரோஜா, சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசுகையில், வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கில் ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துகிறோம்.

## 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் துவரைச் சாகுபடி செய்ய இலக்கு: மாவட்ட ஆட்சியர்



தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நிகழாண்டில் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் மாவட்டத்தில் 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் துவரைச் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் எஸ்.ஏ.ராமன்

தெரிவித்தார்.

மாவட்டத்தில் வேளாண், தோட்டக்கலைத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து செய்தியாளர்கள் பயணம் வியாழக்கிழமை நடைபெற்றது.

அப்போது, திருப்பத்தூர் வட்டம், மடவாளம் ஊராட்சிக்கு உள்பட்ட காளத்தியூர் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 1.5 ஹெக்டேர் பரப்பளவில் மாதேஸ்வரன் என்ற விவசாயி பருத்தி உற்பத்தி நடவு முறையில் ஊடுபயிராக துவரைச் செடிகள் பயிரிட்டிருப்பதை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஏ.ராமன் நேரில் பார்வையிட்டார்.

தொடர்ந்து, காவாப்பட்டரையில் வடிவேல் என்பவரின் மாந்தோப்பு, தென்னந்தோப்புகளில் விதைப்பு முறையில் ஊடுபயிராக துவரைச் செடிகள் பயிரிடப்பட்டிருப்பது, குரிசிலாப்பட்டு ஊராட்சிக்குள்பட்ட முத்தம்பட்டு பள்ளவள்ளி கிராமத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் தண்டபாணி என்பவர் அரசு மானியத்துடன் பசுமைக்குடில் அமைத்து ரூ. 17.80 லட்சம் செலவில் 2,000 சதுர மீட்டர் பரப்பில் சாமந்தி மலர் உற்பத்தி செய்வதை ஆட்சியர் நேரில் பார்வையிட்டார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.ஏ.ராமன் கூறியதாவது:

வேலூர் மாவட்டத்தில் பயறு சாகுபடியை அதிகரிக்க மத்திய, மாநில அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிகழாண்டில் துவரைச் சாகுபடி பரப்பை அதிகரித்து, உற்பத்தியை பெருக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 2,500 மானியம் வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் துவரைச் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், 50 ஆயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் பருத்தி, கடலை பயிர்களில் ஊடுபயிராக துவரை பயிரிட்டுள்ளனர். நடவு முறை மூலம் துவரைச் சாகுபடி செய்வதால் விவசாயிகளுக்கு ஒன்றரை முதல்

இரண்டு மடங்கு உற்பத்தி அதிகரிப்பதுடன், ஹெக்டேருக்கு 2 கிலோ விதைகள் மட்டுமே தேவைப்படும்.

தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்வதற்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் 2015-16-ஆம் ஆண்டில் 10,000 சதுர மீட்டர் அளவுக்கு பசுமைக்குடில் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறையில் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது என்றார்.

வேளாண் துறை இணை இயக்குநர் ராமகிருஷ்ணன், துணை இயக்குநர் பொன்னு, உதவி இயக்குநர்கள் சத்தியமூர்த்தி, பிரதீப் குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 27ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் வரும், 27ல் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. இதுகுறித்து கலெக்டர் கதிரவன் வெளியிட்டுள் அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வரும், 27ல் காலை, 11:00 மணிக்கு, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பங்கேற்று, தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பு.புளியம்பட்டியில் மழை

புன்செய்புளியம்பட்டி: புன்செய்புளியம்பட்டி சுற்றுவட்டார பகுதியில் கனமழை பெய்தது. கடந்த சில மாதங்களாகவே, புன்செய்புளியம்பட்டி பகுதியில் போதிய மழை இல்லை. தண்ணீர் இன்றி, தோட்டங்களையும், கால்நடைகளையும் பராமரிக்க முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டனர். இந்நிலையில், புன்செய்புளியம்பட்டி சுற்றுவட்டார பகுதியில், நேற்று மதியம், 2:00 மணி முதல், 3:00 மணி வரை கன மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

* பவானிசாகர் சுற்றுவட்டார பகுதியில், மதியம், 1:00 மணிக்கு துவங்கிய மழை, 2:30 மணி வரை வெளுத்து வாங்கியது. பல கிராமங்களிலும், மழைவேண்டி பிரார்த்தனை செய்த நிலையில், மழை பெய்ததாலும், கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டதாலும் விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தனர்.

## தயார் நிலையில் அழகாபுரி அணை

வேடசந்தூர், வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரி அணையில் 'ஷட்டர்'கள் புதுப்பிக்கப்பட்டு தண்ணீர் தேக்கும் வகையில் தயார் நிலையில் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரியில், குடகனாற்றின் குறுக்கே கட்டப்பட்டடுள்ள குடகனாறு அணை 27 அடி கொள்ளவு கொண்டது. இந்த அணையில் இருந்து இரு கிளை வாய்க்கால்கள் மூலம், திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 9 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறுகின்றன.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு, அணையின் மேற்புறம் உள்ள ஐந்து ஷட்டர்கள் பழுதானதால் ரூ.81 லட்சம் செலவில் சரி செய்யப்பட்டன. அதற்காக அணையில் இருந்த தண்ணீர் திறக்கப்பட்டதால், தற்போது அணை தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கிறது. தற்போது மழை காலம் துவங்கியுள்ள நிலையில், 'மழையை எதிர்பார்த்து அழகாபுரி அணை தயார் நிலையில் உள்ளதாக' அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சாலையோர மரக்கன்றுகள் பராமரிப்பு பணி தீவிரம்

கிருஷ்ணராயபுரம்: திருக்காம்புலியூர் பஞ்சாயத்து பகுதியில், சாலையோரம் நடப்பட்ட மரக்கன்றுகளுக்கு, நூறுநாள் திட்ட தொழிலாளர்கள் மூலம் தண்ணீர் விடப்படுகிறது. கிருஷ்ணராயபுரம் தாலுகா, திருக்காம்புலியூர் பஞ்சாயத்து எல்லையில், சேங்கல் செல்லும் செக்கணம் சாலையின் இருபுறமும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இந்த மரச்செடிகள் தற்போது ஓரளவு வளர்ந்துள்ள நிலையில், ஒருசில கன்றுகள் காய்ந்து வருகின்றன. அதனால், செடிகள் மேலும் காய்ந்து விடமால் இருக்க, பஞ்சாயத்து நிர்வாகம் சார்பில், நூறுநாள் திட்டம் தொழிலாளர்களை கொண்டு, தண்ணீர் விடப்படுகிறது. ஆங்காங்கே அமைக்கப்பட்ட சின்டெக்ஸ் குடிநீர் தொட்டியில் இருந்து தண்ணீர் எடுத்து, மரக்கன்று வாரியாக குடத்தில் எடுத்து வந்து தொழிலாளர்கள் தண்ணீர் விடுகின்றனர். அதனால், சாலை ஒரங்களில் நடப்பட்ட மரக்கன்றுகள் பசுமையாக தெரிகின்றன. வளர்க்கபடுகின்றது.

## திருவாடானையில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

திருவாடானை, திருவாடானை சுற்றுவட்டாரப் பகுதிகளில் இரண்டு நாட்களாக தொடரும் மிகமான மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருவாடானை தாலுகா பகுதிகளில் நடப்பு சம்பா சாகுபடிக்காக விவசாயிகள் விளைநிலங்களில் நேரடி நெல் விதைப்பு செய்துள்ளனர். பருவமழை காலதாமதமாகி வருவதாலும், கோடையை மிஞ்சும் விதத்தில் வெயில் வாட்டி வதைப்பதாலும் விதைகள் முளைப்பு திறன் குறைந்தது. இதையடுத்து இரண்டாவது முறையாக மீண்டும் விதைப்பு செய்துள்ளனர். இந்நிலையில் அப்பகுதிகளில் இரண்டு நாட்களாக தொடர்ந்து மிதமான மழை பெய்துவருகிறது. இந்த மழையால் நெல் விதைகள் முளைப்பு திறன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே பயிர்கள் நன்கு வளர்ச்சி அடைந்து மகசூல் நிலையை எட்டும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## விதைக்கிராம திட்டம்

பரமக்குடி, நயினார்கோவில் ஒன்றியக்தில் அட்மா கிட்டக்கின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. திட்ட இயக்குநர் உதுமான்முகைதீன் தலைமை வகித்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) சித்ரலேகா வரவேற்றார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் வெள்ளைச்சாமி முன்னிலை வகித்தார். விதைத்தேர்வு, விதைநேர்க்கி, களை, உரம், பூச்சி, நீர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, அறுவடை தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர்.

## ரூ.12.95 லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் 37 விவசாயிகளுக்கு வழங்கல்

ராமநாதபுரம், வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் 37 விவசாயிகளுக்கு 12.95 லட்சம் ரூபாய் மதிப்பிலான விவசாய இயந்திரங்கள், கருவிகள் வழங்கப்பட்டது.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் நடராஜன் தலைமையில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் அலி அக்பர், வேளாண் இணை இயக்குனர் அரிவாசன், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) வெள்ளைச்சாமி, தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ்வேந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.
கூட்டத்தில் விவசாய மானிய திட்டத்தின் கீழ் 37 விவசாயிகளுக்கு 12.95 லட்சம் ரூபாய் மதிப்பிலான உழவு டிராக்டர், மருந்து விசைத்தெளிப்பான் உள்ளிட்ட விவசாய இயந்திரங்கள், கருவிகளை கலெக்டர் நடராஜன் வழங்கினார். பின், கலெக்டர் பேசியதாவது:

மாவட்டத்தில் நடப்பாண்டில் இதுவரை சராசரியாக 176.31 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் பரவலாக மழை பெய்கிறது. செப்., வரை 124 டன் நெல் விதை விற்கப்பட்டுள்ளது. வேளாண் பொறியியல் துறை சார்பில், 1174 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பருவமழை துவங்க உள்ள நிலையில், விவசாயிகள் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்வது அவசியம். நவ.,30க்குள் அனைவரும் பயிர் காப்பீடு செய்து பிரிமியம் செலுத்த வேண்டும், என்றார்.

## கையடக்க மண் பரிசோதனை கருவி 'சிக்ரி' விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

காரைக்குடி, நிலத்தில் மண் தன்மையை விவசாயிகளே நேரடியாக அறிய உதவும் கையடக்க கருவியை, காரைக்குடி மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவன (சிக்ரி) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

விவசாயிகள், மண் பரிசோதனை செய்ய மாவட்ட விவசாய அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதில், அலைச்சல் ஏற்படுவதால் மண் பரிசோதனை செய்யாமல், அனுபவ ரீதியாக விவசாயம் செய்து, தேவைக்கு அதிகமான உரங்களை பயன்படுத்துகின்றனர்; இதனால், மண் தரம் குன்றி விளைச்சல் பாதிக்கப்படுகிறது.

இதனால், விவசாயிகளே பயன்படுத்தும் வகையில் மண் பரிசோதனை கருவியை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில், 'சிக்ரி' விஞ்ஞானிகள் மதியரசு, கென்னடி ஈடுபட்டனர்.தற்போது, கையடக்க கருவியை கண்டுபிடித்து அனைத்து மாவட்ட மண்பரிசோதனை நிலையங்களுக்கும் அனுப்பி, அதன் விபரங்களை சேகரித்து வருகின்றனர். இக்கருவியை வணிக ரீதியில் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி தொடர்கிறது.

மதியரசு கூறியதாவது: 'பாலி புரோப்பலின் டியூப்'பில் மண்சாறை எடுத்து, கையடக்க கருவியுடன் கூடிய மாதிரி ஹோல்டரில் பொருத்த வேண்டும். அப்போது, மண்ணில் உள்ள சத்துக்களின் சதவீதம் தெரியும்; இதன்படி, விவசாய அதிகாரிகளிடம் ஆலோசனை பெறலாம்.

நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், கார, அமில தன்மை அறிவதற்கு ஏற்ற வகையில் நான்கு 'டியூப்'கள் வழங்கப்படும். ஒரு 'டியூப்' விலை 40 காசுகள் மட்டுமே. தற்போது, 500 ரூபாய் செலவில் இதை வடிவமைத்துள்ளோம். இதை 200 ரூபாய்க்குள் வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். கோவை வேளாண் பல்கலை ஆராய்ச்சி நிலையத்தினர் உதவி வருகின்றனர், என்றார்.

## பயறு உற்பத்தியில் 14 க்கு முன்னேறிய தமிழகம்

சிவகங்கை, நவீன தொழில் நுட்ப முறையால் பயறு உற்பத்தி திறனில் தமிழகம் 21ல் இருந்து 14 வது இடக்கிற்கு முன்னேறியுள்ளதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரை பயறு வகைகள் அதிகளவில் வரப்பு மற்றும் ஊடு பயிராக பயிரிடப்பட்டு வந்தன. இதனால் பயறு சாகுபடி பரப்பும், உற்பத்தி திறனும் குறைவாக இருந்தது.

தமிழகம் பயறு உற்பத்தி திறனில் தேசிய அளவில் 21 வது இடத்தில் இருந்தது. கடந்த 5 ஆண்டுகளாக பயறு உற்பத்திக்கு தமிழக அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. கோடை பயிராகவும், குறைவான தண்ணீர் உள்ள இடங்களிலும் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.

மேலும் நவீன தொழில்நுட்பம், பயிர் பாதுகாப்பு முறைகளும் கடைபிடிக்கப்படு வதால் உற்பத்தி திறன் அதிகரித்துள்ளது.

பயறு வகைகள் தேசிய அளவில் எக்டேருக்கு உற்பத்தித் திறன் 764 கிலோவாக உள்ளது. தமிழகம் தற்போது 500 கிலோவை எட்டியுள்ளது. இதனால் 21 ல் இருந்து 14 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.அதேபோல் மக்காச்சோளம், நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முதலிடம், கரும்பில் 2 வது இடம், நெல், சூரியகாந்தியில் 3 வது இடம், கம்பு, சோளம், சிறுதானியங்கள், பருத்தி 4 வது இடத்தில் தமிழகம் உள்ளதாக வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இரு கன்றுகளை ஈன்ற பசுமாடு

அரூர்: அரூர் அருகே, இரண்டு கன்றுகளை ஈன்ற ஜெர்ஸி கலப்பின பசு மாட்டை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர். தர்மபுரி மாவட்டம், அரூர் அடுத்த நம்பிப்பட்டியை சேர்ந்த விவசாயி குமார், 52. இவர் ஜெர்ஸி கலப்பின பசு மாடு ஒன்றை வளர்த்து வருகிறார். இந்நிலையில், சினையாக இருந்த அம்மாடு, நேற்று முன்தினம் மாலை, தலா ஒரு, கிடா, கிடாரி கன்றுகளை ஈன்றது. தகவலறிந்த அப்பகுதி மக்கள், பசுமாட்டையும், இரு கன்றுகளையும் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### சாண்டிநல்லா இனவிருத்தி நிலையத்தில் ஆடுகள் விற்பனை

ஊட்டி, : சாண்டிநல்லா ஆடு இனவிருத்தி நிலையத்தில் ஆண்டுதோறும் ஆடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை பெற பொதுமக்கள் முன்பதிவு செய்து பயன்பெறலாம் என விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தொிவிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஊட்டியில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை தாங்கினார். கூட்டத்தில் தோட்டக்கலை இணை இயக்குநர் மணி, விவசாய சங்கங்களை சார்ந்த விவசாயிகள், இதர அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதில் விவசாய சங்கங்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு தகுந்த விவரம் பெற்று ெதரிவிக்கப்பட்டது. கோடப்பமந்து பகுதியில் தூர்வாறும் பணிகள் தொடர்பாக திட்ட அறிக்கை மாவட்ட கலெக்டர் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் பொறியியல் துறை சார்பில் ெதரிவிக்கப்பட்டது.

சாண்டிநல்லா ஆடு இனவிருத்தி நிலையத்தில் ஆண்டு தோறும் ஜூன் கடைசி வாரம், ஆகஸ்ட் முதல் வாரம் மற்றும் ஜனவாி கடைசி வாரம், பிப்ரவாி முதல் வாரத்தில் ஆடுகள் விற்கப்படும். மேலும் அங்குள்ள பதிவேட்டில் இனவிருத்திக்காக தேவைப்படும் ஆடுகளைப் பெற பொதுமக்கள் தங்கள் தொலைபேசி எண் மற்றும் பெயரை முன்பதிவு செய்ய வேண்டும். குறிப்பிட்ட மாதங்களில் தகவல் அளிக்கப்படும். முன்னுாிமை அடிப்படையில் முன்பதிவு செய்தவர்களுக்கு ஆடுகள் வழங்கப்படும் என கால்நடைத்துறை மூலம் ெதரிவிக்கப்பட்டது.

## ‘மழை தொழில்நுட்பம்’ மூலம் தூர்ந்துபோன ஆழ்துளை கிணறுகளை உயிர்ப்பிக்க முடிவு

திண்டுக்கல், : உள்ளாட்சியில் தூர்ந்து கிடக்கும் ஆழ்துளைக் கிணறுகளை `மழை தொழில்நுட்பம்’ மூலம் உயிர்ப்பிக்க உள்ளாட்சித்துறையினர் திட்டமிட்டுள்ளனர். இதற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் தங்களுக்குச் சொந்தமான ஆழ்துளைக் கிணறுகளையும் இம்முறையில் புத்துயிர் கொடுக்கலாம்.

அணை, குளம் உள்ளிட்டவற்றின் மூலம் பொதுமக்களின் குடிநீர் தேவைகளை உள்ளாட்சிகள் ஓரளவிற்குப் பூர்த்தி செய்தாலும் பற்றாக்குறையே ஏற்பட்டு வருகிறது. இதனால் பல பகுதிகளிலும் நிலத்தடி நீரையே சார்ந்து இருக்க வேண்டிய நிலை உள்ளது. இதற்காக உள்ளாட்சிகளில் பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப ஆழ்குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், குறைவான ஆழத்தில் அமைத்திருப்பது, நீர் மட்டம் கீழிறங்கியது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இக்குழாய்கள் செயலிழந்து கிடக்கின்றன.

தற்போது பருவமழையை எதிர்பார்த்து நீர் சேகரிப்பதற்கான பல்வேறு முயற்சிகள் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. இதன் ஒருபகுதியாக தூர்ந்து போன ஆழ்குழாய்களையும் உயிர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான கணக்கெடுப்பு சமீபத்தில் நடைபெற்றது. இதன்படி மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களிலும் 1703 தூர்ந்து போன ஆழ்துளைக் கிணறுகள் இருப்பது கண்டறியப்பட்டது. அடுத்தகட்டமாக இந்தச் செயலிழந்த குழாய்களுக்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி இது போன்ற ஆழ்துளைகளை சுற்றி 300 மீ நீளம், 300 மீ அகலம், 1.20 மீட்டர் ஆழத்திற்கு குழி தோண்டப்படுகின்றன. பின்பு ஆழ்துளைக் கிணற்றில் ஏற்கெனவே சொருகப்பட்ட பிவிசி குழாயின் அடியில் 70 செமீ உயரத்திற்குத் துளையிட வேண்டும். பின்பு அதில் நைலான் கொசுவலை கட்டி ஆழ்துளை குழாயைச் சுற்றியுள்ள குழியில் 40 மற்றும் 20 மிமீ ஜல்லிக்கல் இட வேண்டும். மேலும் ஆற்றுமணல் தரையில் இருந்து 35 செமீ. 35,30 செமீ அளவுகளில் மூன்று

அடுக்குகளாக நிரப்ப வேண்டும். பின்பு குழியைச் சுற்றி இடைவெளிவிட்டு செங்கல்சுவர் அமைத்து மழைநீர் ஆழ்துளை கிணற்று குழிக்குச் செல்லும் வகையில் குழாய்களை அமைக்க வேண்டும்.

ஒரு குழாய்க்கு சுமார் ரூ.18 ஆயிரம் செலவாகும். விரயமாகும் மழைநீரை இந்த முறையில் சேகரிப்பதால் வறண்டு கிடக்கும் ஆழ்குழாய்களில் நீர் சேகரமாகும். செறிவூட்டப்பட்டு நிலத்தடி நீர்மட்டமும் உயரும். இதன் மூலம் அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையும் பூர்த்தியாகும் என்று மாவட்ட நிர்வாகம் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்களும் இந்தமுறையில் தங்கள் வீடு, தோட்டம் உள்ளிட்ட இடங்களில் தூர்ந்து போன குழாய்களை புதுப்பிக்கலாம். புதிதாக ஆழ்துளை கிணறுகளை அமைப்பதைவிட இதற்கான செலவு குறைவுதான். எனவே மழை வரும்முன்பே இதற்கான வழிமுறைகளைச் செய்து கொண்டால் ஆண்டு முழுவதும் எவ்விதச் செலவும் இன்றி நீர் பெற உதவிகரமாக இருக்கும் என்று உள்ளாட்சித்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

## குமரி முழுவதும் விடிய விடிய மிதமான மழை விவசாயிகளுக்கு ஆறுதல்

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை பொய்த்து போனதன் காரணமாக தற்போது அணைகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. வெயில் வாட்டி வதைத்து வந்ததால் கால்வாய்கள், குளங்கள் வறண்டன. கும்பப் பூ சாகுபடி பணிகளை தொடங்க முடியுமா? என்ற நிலை உருவாகி உள்ளது. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 2வது வாரத்திலேயே தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. ஆனாலும் வெயில் கொடுமை அதிகமாக இருந்தது.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களாக குமரி மாவட்டத்தில் லேசாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலையில் பல்வேறு இடங்களில் சாரல் இருந்தது. இரவு முதல் நாகர்கோவில் உள்பட மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் விடிய விடிய மழை பெய்தது. இந்த மழை நேற்று காலை வரை நீடித்தது. இந்த மழை காரணமாக ஆறுகளுக்கு தண்ணீர் வரத்து சற்று

அதிகரித்தது.

மலை பகுதிகளிலும் மழை பெய்து வருவதால், அணைகளுக்கான நீர் வரத்து இனி வரும் நாட்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை நீர் மட்டம் 13.45 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 282 கன அடி தண்ணீர் வந்தது.

அணையில் இருந்து 430 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கடந்த ஆண்டு இதே நாளில் பேச்சிப்பாறை நீர் மட்டம் 41.23 அடியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பெருஞ்சாணி அணை நீர் மட்டம் 8.50 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 20 கன அடி தண்ணீர் தான் வருகிறது. அணையில் இருந்து 10 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் அணையில் 72.32 அடி தண்ணீர் இருந்தது. வறட்சி நிலவி வந்த நிலையில் இரவு முதல் பெய்த மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழை நீடித்து அணைகளில் தண்ணீர் பெருக்கெடுக்க வேண்டும் என அவர்கள் வேண்டி வருகிறார்கள்.

மழையை பொறுத்தவரை ஆனைக்கிடங்கு பகுதியில் அதிகபட்சமாக 39 மில்லி மீட்டரும், முள்ளங்கினாவிளையில் 37 மில்லி மீட்டரும் பெய்துள்ளது. மற்ற இடங்களில் பெய்துள்ள மழை அளவு (மி.மீ.) வருமாறு : பேச்சிப்பாறை 10.4, சிற்றார் 1 -1.6, சிற்றார்2 - 8.4, மாம்பழத்துறையாறு 30, இரணியல் 6.2, குளச்சல் 8.6, குருந்தன்கோடு 17.8, நாகர்கோவில் 13, பூதப்பாண்டி 2.5, கன்னிமார் 5.8, பாலமோர் 2.4. நாகர்கோவில் நகரில் பாதாள சாக்கடைக்காக சாலைகள் தோண்டப்பட்டு மூடப்படாமல் உள்ளன. இரவு பெய்த மழை காரணமாக சாலைகளில் வாகனங்கள் செல்ல முடியாமல் திணறின. பல சாலைகளில் தண்ணீர் தேங்கி, நடந்து செல்ல முடியாத நிலை இருந்தது.

## போடி பகுதி விவசாயிகள் வெல்லம் தயாரிப்பு பணியில் தீவிரம்

போடி, : போடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வெல்லம் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தேனி மாவட்டம் போடி மற்றும் சுற்றியுள்ள பத்ரகாளிபுரம், விசுவாசபுரம், டொம்புசோரி, உப்புக்கோட்டை, மீனாட்சிபுரம், அணைகரைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கடந்த ஆண்டை விட கூடுதலாக கரும்பு பயிரிட்டுள்ளனர். தற்போது நன்கு விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ள கரும்புகளை வெட்டி சொந்தமாக வெல்லம் தயாரித்து வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன் 72 கிலோ எடை கொண்ட வெல்ல மூடை ரூ.2500க்கு விற்பனை ஆனது. தற்போது வெல்ல மூடை ரூ. 1700க்கு விலை போகிறது. விலை குறைந்த போதும் இரட்டிப்பு லாபம் கிடைப்பதாலும், சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படும் கரும்புக்கு பல மாதங்கள் கழித்தே பணம் கிடைப்பதாலும் வெட்டிய கரும்புகளை வெல்லமாக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். மேலும் தைப்பொங்கலுக்கு இன்னும் 3 மாதங்களே உள்ளதால் இதர விவசாயிகளும் கரும்பு விதைக்க மும்முரம் காட்டி வருகின்றனர்.